மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 54,439 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதிலே பழுதடைந்த, வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்ற 15,313 அங்கன்வாடி மையங்களைச் சீர்படுத்தவும், சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்துக் கட்ட வேண்டும் என்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் இந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 273, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

273—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***33875—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2014 ஜூலை 30]

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் ஆகும். தொடர்ந்து வறட்சிக்கு உள்ளாகின்ற பகுதி. கல்வியறிவிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற அந்தப் பகுதியினுடைய நிலை கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தருமபுரி மாவட்டம் கல்வியிலே பின்தங்கிய மாவட்டம், அது வறட்சியான மாவட்டம் என்று தெரிவித்து, அங்கே பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று ஒரு கோரிக்கையை இங்கே வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பின்பு, தருமபுரி மாவட்டம் கல்வியிலே பின்தங்கிய மாவட்டமாக இருந்ததை மாற்றி, முன்னேறிய மாவட்டமாக வர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், எந்த மாவட்டத்திற்கும் இல்லாத அளவிற்கு நான்கு கல்லூரிகளை அந்த மாவட்டத்திற்குத் தந்து பெருமை சேர்த்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஒரு பொறியியல் கல்லூரியைத் தந்து அந்த மாவட்டத்தைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், பெண்களுக்கென்று காரியமங்கலத்திலே கலை மற்றும் அறிவியல்

கல்லூரியைக் கொடுத்திருக்கிறார்கள். அரூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் ஒரு கல்லூரி, ஆக நான்கு கல்லூரிகளைத் தந்து, அந்த மாவட்டம் கல்வியிலே மேன்மை பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியைப் பொறுத்தவரையில், தருமபுரி மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 18, ஆக மொத்தம் 19 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றில் 7,350 இடங்களில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. ஆனால், கடந்த ஆண்டு 3,910 மாணவர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். ஆக, பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் மாணவர்கள் சேர்ந்து படிக்க வேண்டுமென்று சொன்னால், போதிய இடங்கள் தருமபுரி மாவட்டம், அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியிலேயே இருக்கிறது. ஆகவே, இதனை அடிப்படையாக வைத்து, கல்லூரியை இந்த ஆண்டு தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்ற பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் வட்டத்தில், பென்னாகரம் ஒன்றியம், புதிதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த ஏரியூர் ஒன்றியம் ஆகிய இரு ஒன்றியங்கள் இருக்கின்றன. இந்த இரு ஒன்றியங்களிலிருந்து மாணவர்கள் வெளி மாவட்டத்திற்குச் சென்று படிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. தற்போது இருக்கின்ற கல்லூரி தருமபுரி தேசிய நெடுஞ்சாலையில், கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. ஆக, பென்னாகரம் பகுதியிலிருந்து கல்லூரிகள் தொலைவில் இருக்கின்றன. இரண்டாவதாக, பல மாணவர்களுக்கு கடந்த ஆண்டுகூட இடம் கிடைக்காத சூழ்நிலையும் ஏற்பட்டது. இங்கிருக்கின்ற மாணவர்கள் கோவை மாவட்டத்திற்கும், ஈரோடு மாவட்டத்திற்கும், நாமக்கல் மாவட்டத்திற்கும் சென்று

2014 ஜூலை 30]

படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆக, இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, வருகின்ற காலத்திலாவது பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியை அமைக்க தமிழக அரசு மறுபரிசீலனை செய்து, ஆவன செய்யுமா என தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஏரியூர் பகுதியிலிருந்து மாணவர்கள் வெளி மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக தருமபுரி மாவட்டம் இப்பொழுது கல்வியிலே முன்னேறிய மாவட்டமாக வளர்ந்து வருகிறது. அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தருமபுரி மாவட்டத்திலேயே ஒன்று இருக்கிறது. அதிலே மாணவர்கள் படிப்பதற்குப் போதுமான இடங்கள் இருக்கின்றன. இன்றைக்கு மாநில அளவிலே பார்த்தால், 2 இலட்சத்து 32 ஆயிரம் இடங்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் இருக்கின்றன. சென்ற ஆண்டு ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 795 மாணவர்கள்தான் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, ஏரியூரிலிருந்து தருமபுரி மாவட்டத்திற்கு வருவதற்கு தூரமாக இருந்தால்கூட, பக்கத்திலே சேலம் மாவட்டத்திலே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, எதிர்காலத்தில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக வருகின்றபோது, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 274, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*